130/2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகள்

நவம்பர் 6, 2001 தொகுதி 109
எண் 1.

V211,31'P00
P00.109.1
3 12746

வெளியீடு 7-2-2001 Issued 7-2-2001

827

130/2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, நவம்பர் 6, 2000 – தொகுதி 109 – எண் 1**

**Monday the 6th November, 2000 – Volume 109 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

விலை ரூ. *3.00*] [Price Rs. 3.00

222786

D

V211,31'N00
N00-109.1

6–11–2000

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii - vii |
| Personnel of the Government of Tamil Nadu | ix -xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xv -xvii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xix -xxix |

1. இரங்கற் குறிப்புகள்——

| | |
|---|---|
| முன்னாள் உறுப்பினர்கள் 9 பேர் மறைவு | 1 - 3 |

2. இரங்கல் தீர்மானங்கள்——

| | |
|---|---|
| மத்திய மின் துறை அமைச்சர் திரு. பி. ரங்கராஜன் குமாரமங்கலம், மாநில வருவாய்த் துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் மற்றும் உறுப்பினர்கள் திரு. சி. அன்பரசன், திரு. பிஎன். வல்லரசு ஆகியோர் மறைவு | 3 - 31 |
| *பேராசிரியர் க. அன்பழகன் | 3 - 7 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 7 - 10 |
| திரு. ஜி. பழனிசாமி | 10 - 11 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 11 - 12 |
| திரு. ஐ. கணேசன் | 13 - 14 |
| திரு. ம. அப்துல் லத்திப் | 14 - 17 |

| | பக்கங்கள் |
|---|---|
| 2. இரங்கல் தீர்மானங்கள்——தொடர்ச்சி | |
| *திரு. லா. சந்தானம் | 18 - 19 |
| *திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 20 - 21 |
| திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் | 22 - 23 |
| திரு. சி. வேலாயுதன் | 23 - 25 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 25 - 26 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற திரன் | 26 - 28 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 28 - 30 |
| 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 31 |




## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர் — நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் | .. மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: *பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.* |
| 2. கல்வி அமைச்சர் | .. மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: *தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.* |
| 3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | .. மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: *மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.* |
| 4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | .. மாண்புமிகு திரு. கோ.சி. மணி: *நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.* |

5. வேளாண்மைத் துறை அமைச்சர்: .. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:
*வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.*

6. பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்:
*பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.*

7. போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:
*போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப் பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு மற்றும் பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.*

8. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:
*நெடுஞ்சாலைகள் மற்றும் துறை முகங்கள்.*

9. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க் குடிமகன்:
*தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.*



10. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கா.நா. நேரு:
*உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.*

11. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. க. சுந்தரம்:
*பால், பால் பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு.*

12. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:
*வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள் மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).*

13. சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆலடி அருணா:
*சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.*

14. கைத்தறித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:
*கைத்தறி, துணித் தொழில்.*

15. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:
*பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.*

16. இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் .. *மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:*
*விளையாட்டு, இளைஞர் பணிப் படை மற்றும் சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.*

17. வீட்டு வசதித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:
*வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.*

18. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் .. *மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:*
*கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.*

19. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் .. *மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:*
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.*

20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:
*கால்நடை பராமரிப்பு.*

21. சமூக நலத் துறை அமைச்சர் .. *மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:*
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.*



22. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் .. *மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:*
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.*

23. சுற்றுலாத் துறை அமைச்சர் .. *மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:*
*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

24. கதர்த் துறை அமைச்சர் .. *மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:*
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.*

25. மீன் வளத் துறை அமைச்சர் .. *மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:*
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.*

---

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR -- Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M.Karunanidhi:** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:** Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko. Si. Mani:** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

5. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development

| | | |
|---|---|---|
| 6. **Minister for Public Works and Forest** | .. | **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works , Forest and Cinchona. |
| 7. **Minister for Transport and Labour** | .. | **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Chennai Metropolitan Development Authority, Labour, Census, Employment and Training, Iron and Steel Control and Newsprint Control. |
| 8. **Minister for Highways** | .. | **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports. |
| 9. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 10. **Minister for Food, Public Distribution System and Co-operation** | .. | **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 11. **Minister for Milk** | .. | **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |
| 12. **Minister for Revenue** | .. | **The Hon. Thiru A. Rahman Khan:** Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Wakf. |



| | | |
|---|---|---|
| 13. **Minister for Law** | .. | **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| 14. **Minister for Handlooms** | .. | **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles. |
| 15. **Minister for Backward Classes** | .. | **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 16. **Minister for Youth and Pollution Control** | .. | **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Sports, Youth Service Corps and Environmental Pollution Control.. |
| 17. **Minister for Housing** | .. | **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 18. **Minister for Rural Industries and Registration** | .. | **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 19. **Minister for Information, Publicity and Printing** | .. | **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |
| 20. **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |

21. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme.

22. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

23. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation.

24. **Minister for Khadi** .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan.

25. **Minister for Fisheries** .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation.

---



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்*

## பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி*

## மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

*திரு. அ.லெ. சுப்பிரமணியன்*

*திரு. சி.டி. தண்டபாணி*

*திரு. குத்தாலம் பி. கல்யாணம்*

*டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்*

*திரு. நா. பெரியசாமி*

## செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

*8-11-2000 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. கி. சாமிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 4. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 5. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10 | திரு. க. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| 11. | திரு. ஹென்றி அய்யாத்துரை | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |

12. திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

13. திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

14. திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

15. திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்

16. திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

17. திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்

18. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

19. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

20. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்

21. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

22. திரு. ச. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

23. திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

24. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

25. திரு. வை. கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்

26. திரு. பு. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்



27. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்

28. திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. .. தலைமை நிருபர்

29. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்

30. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்

31. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்

32. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

33. திரு. நா. நடராஜன், பி.ஏ. பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

34. திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

35. திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். .. தலைமை நிருபர்

36. திரு. தி. உமாபதி, பி.ஏ. .. தலைமை நிருபர்

37. திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

38. திரு. கோ. தேவராஜன், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

39. திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

40. திருமதி ச. இரா. கருணா .. தலைமை நிருபர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 7. | அய்யலுசாமி, திரு. லி. | .. கோவில்பட்டி |
| 8. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 9. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 10. | அழகிரி, திரு. ச. | .. சிதம்பரம் |
| 11. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 12. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 13. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 14. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 15. | ஆசையன், திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 16. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. பவானிசாகர் |
| 17. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 18. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |
| 19. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 20. | ஆறுமுகம், திரு. தி.ப. | .. திருச்செங்கோடு |

21. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
22. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
23. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
24. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
25. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
26. இராசன், திரு. வி.பி. .. ராஜபாளையம் (செ.வ.)
27. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
28. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
29. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
30. இராமச்சந்திரன், திரு. ஒ.ஆர். .. கம்பம்
31. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
32. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
33. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில்(செ.வ.)
34. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
35. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு
36. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
37. இராஜ ரெட்டி, திரு. ச. .. தளி
38. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
39. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
40. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
41. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
42. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
43. கணேசன், திரு. ஜ. .. எடப்பாடி



44. கணேசன், திரு. கே.சி. .. ஜெயங்கொண்டம்
45. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
46. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
47. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
48. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
49. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
50. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
51. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
52. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
53. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. .. நாங்குநேரி
54. கிருஷ்ணன், திரு. சீ.வெ. .. வேடசந்தூர்
55. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
56. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
57. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
58. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி
59. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
60. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
61. கோபால், திரு. பா. .. மேட்டூர்
62. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
63. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
64. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்
65. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
66. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

| | |
|---|---|
| 67. சண்முகம், திரு. கோ. | .. திருப்பத்தூர் |
| 68. சண்முகம், திரு. சி. | .. ஆலந்தூர் |
| 69. சண்முகம், திரு. ம. | .. கிணத்துக்கடவு |
| 70. சண்முகம் திரு. வி.சி. | .. நெல்லிக்குப்பம் |
| 71. சந்தானம், திரு. வா. | .. சோழவந்தான் |
| 72. சந்திரசேகரன், திரு. சி. | .. சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 73. சந்திரசேகரன், திரு. துரை. | .. திருவையாறு |
| 74. சமயநல்லூரார் எஸ். செல்வராச, திரு. | .. சமயநல்லூரார் (செ.வ.) |
| 75. சம்பத், திரு. ஏ.ஜி. | .. முகையூர் |
| 76. சரஸ்வதி, திருமதி ஆர். | .. தாராபுரம் (செ.வ.) |
| 77. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. | .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 78. சாமிநாதன், திரு. மு.பெ. | .. வெள்ளக்கோவில் |
| 79. சிங்காரவேலு, திரு. வி.பி. | .. வால்பாறை (செ.வ.) |
| 80. சிவபுண்ணியம், திரு. வை. | .. மன்னார்குடி |
| 81. சிவராமன், திரு. ஆர். | .. திருப்பத்தூர் |
| 82. சிவராஜ், திரு. ச. | .. ரிஷிவந்தியம் |
| 83. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | .. பனமரத்துப்பட்டி |
| 84. சிவானந்தம், திரு. ஆர். | .. ஆரணி |
| 85. சிவாஜி, திரு. இ.ஏ.பி. | .. திருத்தணி |
| 86. சின்னய்யா, திரு. வெ. | .. திருமயம் |
| 87. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | .. விருதுநகர் |
| 88. சுகவனம், திரு. இ.ஜி. | .. பர்கூர் |



| | |
|---|---|
| 89. சுடலைமுத்து, திரு. அ. | .. போடிநாயக்கனூர் |
| 90. சுதர்சனம், திரு. டி. | .. பூந்தமல்லி |
| 91. சுந்தரம், திரு. க. | .. பொன்னேரி (செ.வ.) |
| 92. சுந்தரம், திரு. ந. | .. காரைக்குடி |
| 93. சுந்தரம், திரு. பி.ஆர். | .. ராசிபுரம் |
| 94. சுந்தர், திரு. கே. | .. உத்திரமேரூர் |
| 95. சுப்பராயன், திரு. கே. | .. திருப்பூர் |
| 96. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. | .. திருவள்ளூர் |
| 97. சுப்பிரமணி, திரு. பி.என். | .. ஆற்காடு |
| 98. சுப்பிரமணியன், திரு. அ.லெ. | .. திருநெல்வேலி |
| 99. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | .. மொடக்குறிச்சி |
| 100. சுரேஷ் ராசன், திரு. என். | .. கன்னியாகுமரி |
| 101. செங்குட்டுவன், புலவர் பூ.ம. | .. மருங்காபுரி |
| 102. செங்கை சிவம், திரு. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 103. செல்லக்குமார், டாக்டர் அ. | .. தியாகராய நகர் |
| 104. செல்வம், திரு. ரெ. | .. குளித்தலை |
| 105. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. | .. கொளத்தூர் (செ.வ.) |
| 106. செல்வராஜ், திரு. து. | .. உடுமலைப்பேட்டை |
| 107. சேகரன், திரு. ஆர்.ஆர். | .. ஓமலூர் |
| 108. சேதுநாதன், திரு. ரா. | .. திண்டிவனம் |
| 109. சைதை கா. கிட்டு, திரு. | .. சைதாப்பேட்டை |

110. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
111. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
112. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
113. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
114. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
115. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
116. தங்கவேல், திரு. அ.ல. .. சேலம்-2
117. தண்டபாணி, திரு. சி.டி. .. கோயம்புத்தூர் மேற்கு
118. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
119. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
120. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
121. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
122. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
123. தனபால், திரு. வி.ஜி. .. குடியாத்தம்
124. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
125. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
126. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
127. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
128. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
129. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
130. துரைமுருகன், திரு. .. காட்பாடி
131. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
132. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)



133. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
134. நடராஜன், திரு. த. .. செஞ்சி
135. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
136. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)
137. நாகரத்தினம், திரு.ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
138. நாசர், திரு. ஏ.வி.ஏ. .. புவனகிரி
139. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
140. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
141. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
142. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
143. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
144. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
146. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
149. பாண்டுரங்கன், திரு. ந .. பெரணமல்லூர்
150. பாலகிருஷ்ணன், திரு. சே. .. முதுகுளத்தூர்
151. பாலசுப்பிரமணியன், திரு. என்.என். .. பவானி
152. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
153. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

| | |
|---|---|
| 154. புகழேந்தி, திரு. இ. | .. கடலூர் |
| 155. புரட்சிமணி, திரு. ச. | .. மங்களூர் (செ.வ.) |
| 156. பூவேந்தன், திரு. த. | .. பழனி (செ.வ.) |
| 157. பெரியசாமி, திரு. இ. | .. ஆத்தூர் |
| 158. பெரியசாமி, திரு. என். | .. தூத்துக்குடி |
| 159. பெரியசாமி, திரு. என்.கே.கே. | .. ஈரோடு |
| 160. பெரியசாமி, திரு. நா. | .. பெருந்துறை |
| 161. பெருமாள், திரு. வி. | .. ஏற்காடு (ஆ.வா) |
| 162. பெர்னார்டு, திரு. இரா. | .. குளச்சல் |
| 163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | .. சிங்காநல்லூர் |
| 164. பொன்முடி, டாக்டர் க. | .. விழுப்புரம் |
| 165. பொன்முடி, திரு. எஸ்.எஸ். | .. பல்லடம் |
| 166. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ் | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 167. மகேந்திரன், திரு. இரா. | .. நாட்ராம்பள்ளி |
| 168. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. | .. திருநாவலூர் |
| 169. மணி, டாக்டர் அ. | .. உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 170. மணி, திரு. கோ.சி. | .. கும்பகோணம் |
| 171. மணி, திரு. டி. | .. விளவங்கோடு |
| 172. மணி, திரு. ஜி.கே. | .. பெண்ணாகரம் |
| 173. மணி நாடார், திரு. எஸ்.எஸ். | .. சாத்தான்குளம் |
| 174. மணிமாறன், திரு. இரா. | .. திண்டுக்கல் |
| 175. மணிவர்மா, திரு. க. | .. தண்டராம்பட்டு |



| | |
|---|---|
| 176. மதிவாணன், திரு. இரா. | .. இராயபுரம் |
| 177. மதிவாணன், திரு. செ. | .. அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 178. மனோகரன், திரு. கு. | .. தருமபுரி |
| 179. மாயவன், திரு. தி.ப. | .. ஸ்ரீரங்கம் |
| 180. மாரி அய்யா, திரு. பே. | .. புதுக்கோட்டை |
| 181. மாரிமுத்து, திரு. அ. | .. வானூர் (செ.வ.) |
| 182. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். | .. அரவக்குறிச்சி |
| 183. முகம்மது கோதர் மைதீன், திரு. | .. பாளையங்கோட்டை |
| 184. முத்து, திரு. வி. | .. சங்கரி (செ.வ.) |
| 185. முபாரக், திரு. பா.மு. | .. கூடலூர் |
| 186. முருகேசன், திரு. பொ. | .. காஞ்சிபுரம் |
| 187. முல்லைவேந்தன், திரு. வ. | .. மொரப்பூர் |
| 188. முனிரத்தினம், திரு. ஆ.மு. | .. சோளிங்கர் |
| 189. மூக்கப்பன், திரு. இரா. | .. சின்னசேலம் |
| 190. மூக்கையா, திரு. எல். | .. பெரியகுளம் |
| 191. மோகனதாசன், திரு. கோ. | .. பூம்புகார் |
| 192. மோகன் கந்தசாமி, திரு. ப. | .. பொங்கலூர் |
| 193. மோசஸ், டாக்டர் எம். | .. நாகர்கோவில் |
| 194. ரங்கநாதன், திரு. எம். | .. குன்னூர் (செ.வ.) |
| 195. ரங்கநாதன், திரு. ப. | .. புரசைவாக்கம் |
| 196. ரவி அருணன், திரு. கே. | .. தென்காசி |
| 197. ரவிசங்கர், திரு. கு. | .. விளாத்திகுளம் |
| 198. ராசேந்திரன், திரு. ஏ. | .. போளூர் |

199. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
200. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
201. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
202. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
203. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்
204. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்
205. லட்சமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
206. வாசகி முருகேசன், திருமதி .. கரூர்
207. விசுவநாதன் திரு. இரா. .. நத்தம்
208. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்
209. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்
210. வீரபாண்டி எஸ்.ஆறுமுகம், திரு. .. வீரபாண்டி
211. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை
212. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
213. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
214. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு
215. வெங்கடேசன், திரு. ச.க. .. மதுராந்தகம்
216. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். .. காவேரிப்பட்டினம்
217. வெங்கிடு, திரு. ஜி.பி. .. கோபிச்செட்டிப்பாளையம்
218. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)
219. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
220. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்



221. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு
222. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
223. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
224. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
225. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
226. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி
227. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
228. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு
229. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்
230. (வெற்றிடம்) .. அறந்தாங்கி
231. (வெற்றிடம்) .. உசிலம்பட்டி
232. (வெற்றிடம்) .. சிவகாசி
233. (வெற்றிடம்) .. திருப்போரூர் (செ.வ.)
234. (வெற்றிடம்) .. திருமங்கலம்
235. (வெற்றிடம்) .. திருவல்லிக்கேணி

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஐப்பசி 21, விக்கிரம — திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 நவம்பர் 6, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு."

இந்த உலகமானது நேற்று உயிருடன் இருந்தவரை இன்று இல்லாமல் செய்துவிட்டோம் என்ற அகந்தையைப் பெருமையாகக் கொண்டதாகும்.

*(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)*

### 1. இரங்கற் குறிப்புகள்

#### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் உ. சுப்பிரமணியன் அவர்கள் 31-5-2000 அன்றும், ரா. பெரியசாமி அவர்கள் 10-6-2000 அன்றும், எம். மாரிமுத்து அவர்கள் 17-6-2000 அன்றும், சோ. சிவலோகம் அவர்கள் 25-6-2000 அன்றும், ர. ஜெபமணி அவர்கள் 14-7-2000 அன்றும், எல்ல. இராசமாணிக்கம் அவர்கள் 13-8-2000 அன்றும், எஸ்.சி.சி. அந்தோணி பிள்ளை அவர்கள் 16-8-2000 அன்றும், டி.கே. பழனிசாமி அவர்கள் 24-9-2000 அன்றும், டி.ஏ. ராஜவேலு அவர்கள் 9-10-2000 அன்றும் மறைவுற்றதை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் அவர்கள் 1977-80, 1980-84 மற்றும் 1985-88 ஆகிய காலங்களில் சிவகங்கை தொகுதியிலிருந்து தொடர்ந்து

மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையிலே பணியாற்றியுள்ளார். மேலும் 1985-88 ஆகிய காலங்களில் சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

திரு. ரா. பெரியசாமி அவர்கள் 1977-80 ஆகிய காலங்களில் உப்பிலியாபுரம் தொகுதியிலிருந்தும், 1980-84 மற்றும் 1985-88 ஆகிய காலங்களில் தொட்டியம் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்.

திரு. எம். மாரிமுத்து அவர்கள் 1985-88 ஆகிய காலங்களில் திருப்பரங்குன்றம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையிலே பணியாற்றியுள்ளார்.

திரு. சோ. சிவலோகம் அவர்கள் 1989-91 ஆகிய காலங்களில் புவனகிரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றியுள்ளார்.

திரு. ர. ஜெபமணி அவர்கள் 1977-80 ஆகிய காலங்களில் சாத்தான்குளம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எல்ல. இராசமாணிக்கம் அவர்கள் 1985-88 ஆகிய காலங்களில் தாம்பரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செம்மையாகப் பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ்.சி.சி. அந்தோணி பிள்ளை அவர்கள் 1952-57 ஆகிய காலங்களில் அன்றைய தூளை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றியுள்ளார்.

திரு. டி.கே. பழனிசாமி அவர்கள் 1989-91 ஆகிய காலங்களில் திருவொற்றியூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு போற்றத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.



திரு. டி.ஏ. ராஜவேலு அவர்கள் 1967-71 ஆகிய காலங்களில் திருச்செங்கோடு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த வகையிலே பணியாற்றியுள்ளார்.

இவர்களது மறைவினால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்கள் தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று சில மணித் துளிகள் அமைதி காத்தனர்.)*

*முற்பகல் 9-35*

## 2. இரங்கல் தீர்மானங்கள்

**மத்திய மின் துறை அமைச்சர் திரு. பி. ரங்கராஜன் குமாரமங்கலம், மாநில வருவாய்த் துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் மற்றும் உறுப்பினர்கள் திரு. சி. அன்பரசன், திரு. பி.என். வல்லரசு ஆகியோர் மறைவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. ரங்கராஜன் குமாரமங்கலம், திரு. நாஞ்சில் கி. மனோகரன், திரு. சி. அன்பரசன். திரு. பி.என். வல்லரசு ஆகியோர் மறைவு குறித்து இரங்கல் தீர்மானங்கள். பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய மின்வளத் துறை அமைச்சர் திரு. பி. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்.

"சிறந்த நிர்வாகத் திறன் மிக்கவராக, செயலாற்றல் படைத்த நாடாளுமன்ற உறுப்பினராக, பழகுதற்கினிய நல்ல நண்பராக, மத்திய

மின்வளத் துறை அமைச்சராக விளங்கிய திரு. பி. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள், தனது 48-வது அகவையில் 23-8-2000 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை பெரும் அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அன்னாரது மறைவினால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கும், அவர் சார்ந்திருந்த இயக்கத்திற்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது."

இளமை முதல் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, மிகுந்த எழுச்சியுள்ள செயல் வீரராக விளங்கி, இளைஞர் இயக்கத்திலே முன்னணியிலே நின்று, தொழிலாளர் இயக்கத் தலைவராகவும் விளங்கியவர் ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள். இரண்டு முறை நாடாளுமன்றத்திற்குத் தேர்வு செய்யப்பட்டபின், Minister of State என்ற முறையில் பொறுப்பேற்றுப் பணியாற்றியவர். கடந்த இரண்டு முறை Cabinet Minister-ஆகவும் பொறுப்பேற்று, திறம்படப் பணியாற்றிப் பலருடைய பாராட்டையும் பெற்றவர். பாரம்பரியம் உள்ள குடும்பம் என்ற பெருமை அவருடைய குடும்பத்திற்கு உண்டு. அவருடைய தாத்தா டாக்டர் சுப்பராயன் அவர்கள், 1926, 1927-வது ஆண்டுகளில் நீதிக் கட்சியினுடைய ஆதரவு பெற்ற சுயேச்சை அமைச்சரவையினுடைய முதல்வராகத் திகழ்ந்தார்கள். அந்தக் காலகட்டத்தில், அவருடைய ஆதரவோடு அன்று அமைச்சராக இருந்த திரு. எஸ். முத்தையா அவர்கள் - வழக்கறிஞர் முத்தையா அவர்கள், முதன்முதலாக Communal G.O.-வுக்கு - சமூக நீதிக்கு - ஆணை பிறப்பித்தவர். எனவே, அந்த வரலாற்றுப் புகழ்படைத்த டாக்டர் சுப்பராயன் அவர்களும் மத்திய அமைச்சராக இருந்தவர். நம்முடைய மறைந்த ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களுடைய தந்தையார் திரு. மோகன் குமாரமங்கலம் அவர்களும் மத்திய அமைச்சராக இருந்து புகழ்பெற்றவர். இவரும் அதேபோல் மத்திய அமைச்சராக இருந்து, பெருமையும் புகழும் சேர்த்த நிலையில், இளம் வயதிலேயே இயற்கை அவரைப் பறித்துக் கொண்டதற்காக என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவையினர் தெரிவிக்க இருக்கிற இரங்கலுக்கு முன்மொழியும் தீர்மானம் மூலமாக என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சராக இருந்து மறைந்த திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்:



"திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரும், மிகச் சிறந்த நாடாளுமன்றவாதியும், சொல்லாற்றலிலும், செயலாற்றலிலும் சிறந்து விளங்கியவரும், நிர்வாகத் திறன் மிக்கவரும், தனது இனிய பேச்சினாலும், பழகும் பண்பினாலும் தனி முத்திரை பதித்துக்கொண்டவரும், 'நாஞ்சிலார்' என்று அனைத்துத் தரப்பினராலும் அன்புடன் அழைக்கப்பட்டவரும், தொடர்ந்து மூன்று முறை மக்களவை உறுப்பினராகவும், நான்கு முறை தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், 1977-80 ஆம் ஆண்டுகளில் நிதியமைச்சராகவும், 1989-91 மற்றும் 1996-2000 ஆம் ஆண்டுகளில் வருவாய்த் துறை அமைச்சராகவும் சிறப்புறப் பணியாற்றிய திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள், 1-8-2000 அன்று தமது 71-வது அகவையில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும்கொள்கிறது. அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

நாஞ்சிலார் அவர்களை, அவர் மாணவராக இருந்த காலத்தில், 1945-வது ஆண்டு நான் பார்க்க வாய்ப்புப் பெற்றேன். அன்று முதல், 50, 55 ஆண்டு காலம் என்னிடத்திலே அன்புடையவராகவும், கலைஞரிடத்திலே மிக்க மதிப்போடும், ஓர் உடன்பிறப்பு என்ற உணர்வு கொண்டவராகவும் திகழ்ந்தவர் நாஞ்சில் மனோகரன் அவர்கள். அனைத்துத் தரப்பு கட்சித் தலைவர்கள், தோழர்கள், எல்லோருடனும் மிக இயல்பாகப் பழகுகிற ஒரு நல்ல பண்பான மன நிலையைப் பெற்றிருந்தவர்.

நாடாளுமன்றத்தில் அவரும் நானும் உறுப்பினராக இருந்த அந்தக் காலகட்டத்தில் தேசியத் தலைவர்கள், அந்த நாளிலே இந்திரா காந்தி அமைச்சரவையிலே இருந்த அமைச்சர்கள், திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஆகியோர்களிடத்திலே மிக நட்புறவோடு உரையாடுகின்ற அந்த உள்ளமும், தகுதியும் பெற்றவராக விளங்கியவர். ஜனநாயக உணர்வை இயல்பாகவே வளர்த்துக்கொண்டவர். எல்லோரிடத்திலேயும் மிகச் சரளமாகப் பழகுகிற அந்த இயல்பு காரணமாக அனைவராலும் மதிக்கப்பட்டவர். இந்த அமைச்சரவையில் இடம் பெற்று தன்னுடைய கடமையையும் மிகச் சிறப்பாக நிறைவேற்றியவர் என்று அனைவரும் அறிவார்கள். அவருடைய இழப்பு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பேரிழப்பு. தமிழ்நாட்டிற்கும் இழப்பு. எனவே, இந்த அவையிலே உள்ள

[பேராசிரியர் க. அன்பழகன்] [2000 நவம்பர் 6

அனைவருடைய இரங்கல் உணர்வோடும் இணைந்து இந்தத் தீர்மானம் மூலமாக என்னுடைய ஆழ்ந்த இரங்கலை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-40*

சட்டமன்ற உறுப்பினராக சில மாதங்களே இருந்தாலும் நம்முடைய மதிப்பிற்குரியவரான அன்பரசன் அவர்கள் பற்றிய இரங்கல் தீர்மானம்:

"அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1-3-2000 முதல் 29-6-2000 வரை இப்பேரவையின் உறுப்பினராக சிறிது காலமே பணியாற்றினும் பேரவை நடவடிக்கைகளில் பங்கேற்று சீரிய முறையில் செயலாற்றியவரும், இனிய பண்பும், எளிமையும், அடக்கமும் கொண்டு அனைத்து தரப்பினரிடமும் நட்புணர்வோடு திகழ்ந்தவருமான திரு. சி. அன்பரசன் அவர்கள் 29-6-2000 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும்கொள்கிறது. அன்னாரின் மறைவால் அவரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தினர்க்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது."

திரு. அன்பரசன் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் செல்வாக்கு மிக்க ஓர் இயக்கத்தின் தலைவராகவே விளங்கியவர்கள். மிகச் சிறந்த பேச்சாற்றல் மிக்கவர். தொண்டு செய்வது அவருக்கு இயல்பாகவே அமைந்த ஒரு சிறப்பு. அப்படிப்பட்ட நண்பர் அண்மையிலே தேர்ந்தெடுக்கப்பட்டு, நம்முடைய சட்டமன்றத்திற்கு வந்து நல்லமுறையிலே பேசி, கடமையாற்றி, நம் அனைவருடைய அன்பையும் பெற்ற நிலையில் எதிர்பாராத வகையில், நெஞ்சு வலி காரணமாக மறைய நேரிட்டு, அதனால் ஒரு பெரும் இழப்பு நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர் மறைந்து அதனால் ஏற்பட்ட இந்த ஒரு வருந்தத்தக்க நிலையில் என்னுடைய ஆழ்ந்த இரங்கலை இந்தத் தீர்மானம் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு பி.என். வல்லரசு அவர்கள் மறைவு குறித்து இரங்கல் தீர்மானம்:

"அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் பொதுச் செயலாளரும், பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக அயராது



:000 நவம்பர் 6] [பேராசிரியர் க. அன்பழகன்]

ாடுபட்டவரும், மக்கள் நலனுக்காக தனது வாழ்க்கை முழுவதையும் ர்ப்பணித்துக் கொண்டவரும், எளிமையும், அடக்கமும் கொண்டு னைவரிடத்தும் நேயத்துடன் பழகி வந்தவரும், 1989-91, 1996-2000 ஆகிய காலங்களில் உசிலம்பட்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு ட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய றையில் பணியாற்றியவருமான திரு. பி.என். வல்லரசு அவர்கள் 1-10-2000 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை பெரும் அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அவரது மறைவினால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது"

திரு. வல்லரசு அவர்களைப் பல ஆண்டுகளாக அறிகிற நல்ல வாய்ப்பு எனக்கு இருந்தது. எந்தக் காலகட்டத்திலேயும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக எப்படி எப்படி எல்லாம் பணியாற்றலாம் என்ற உணர்விலேயே தன்னுடைய வாழ்நாளைச் செலவிட்டவர். அவருடைய தலைவர்களாகப் போற்றிய முத்துராமலிங்கத் தேவர், மூக்கையாத் தேவர் ஆகியோர்களுடைய இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காகவே தான் திருமணம் செய்து கொள்ளாமலே தன்னுடைய வாழ்நாளைக் கடத்தியவர். பல குடும்பங்களுக்கு அவர் ஆதரவாளராக இருந்து அவர்களை வாழச் செய்த பெருமை அவருக்கு உண்டு. ஒரு கொள்கையோடு, இலட்சியத்தோடு வாழ்ந்து சட்டமன்றத்திலே அதற்காகவே வாதாடி, அமைச்சர்களைக் காணுகிறபோதெல்லாம் அந்தத் தொகுதியிலே இருக்கிற மக்களுடைய குறைகளை எடுத்துக் கூறிச் சிறந்த முறையில் கடமையாற்றிய சட்டமன்ற உறுப்பினர், ஒரு கட்சியினுடைய முன்னணித் தலைவர், அப்படிப்பட்ட நண்பரை இன்று நாம் இழந்து இருக்கிறோம். எனவே, அவருடைய மறைவு குறித்து என்னுடைய ஆழ்ந்த இரங்கலை இந்தத் தீர்மானம் மூலமாக இந்த அவையில் எடுத்து வைக்கிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மத்திய அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் பாரம்பரியம் மிக்க பெரிய குடும்பத்திலே பிறந்து, அகில இந்தியாவிலேயும் புகழ்பெற்ற மத்திய அமைச்சராகத் திகழ்ந்து, இளம்

வயதிலேயே நம்மைவிட்டுப் பிரிந்தது இந்தத் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்லாமல், இந்தியாவிற்கே மிகப் பெரிய ஒரு பேரிழப்பாகும். ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் அனைவரோடும் இனிமையாகப் பழகக்கூடிய ஒரு நல்ல இனிய நண்பராக விளங்கினார். அவரைப் பொறுத்தவரை, இந்தியாவில் எல்லா சமுதாய மக்களும் விரும்புகின்ற அளவிற்கு விளங்கிய அந்த நல்ல மனிதர் குறுகிய காலத்தில் எப்படி இறந்தார் என்றுகூட இன்று பெரிய ஆராய்ச்சியே நடந்து கொண்டிருக்கிற அளவிற்கு நம்முடைய நாட்டில் ஒரு நல்ல பேரோடும் புகழோடும் திகழ்ந்தவர். ஏற்கெனவே கம்யூனிஸ்ட் இயக்கத்திலே அவர்கள் முழுமையாக ஈடுபட்டிருந்த காலத்திலேயே நம்முடைய அருமை அன்னை இந்திரா காந்தியோடு நெருங்கிய நட்புறவு கொண்டு, அவர் அமைச்சரவையிலே அமைச்சராக இருந்த அவருடைய தந்தையார் காலத்திலேயிருந்து ரங்கராஜன் குமாரமங்கலம் காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரமாகத் தொடர்புடையவர். இப்போது குறுகிய காலத்தில் பாரதிய ஜனதாவோடு அவர் தொடர்பு கொண்டு, பாராளுமன்ற உறுப்பினராகி, அமைச்சராக இருந்தாலும்கூட, கட்சி வேறுபாடு எதுவும் இல்லாமல் பழகுவதற்கு ஒரு நல்ல இனிய நண்பர். அவர் டெல்லியிலே பாரதிய ஜனதா அமைச்சராக இருந்தபோது ஒரு தடவை நான்கூட அவரைச் சந்தித்தேன். நீங்கள் கட்சி வேறுபாடு பார்க்க வேண்டியதில்லை, தமிழ்நாட்டிற்கு என்ன செய்ய வேண்டுமோ அதை நான் செய்யத் தயாராக இருக்கிறேன், எப்போது வந்தாலும் என்னை வந்து பாருங்கள் என்றுகூட என்னிடம் சொன்னார். அப்படிப்பட்ட நல்ல மனிதர், நல்ல இளைஞர், அறிவாற்றல் மிக்கவர், தமிழ்நாட்டிற்கு பல நல்ல காரியங்களைச் செய்யக் காத்திருந்தவர், நம்மைவிட்டு மறைந்துவிட்டார் என்பதை இந்த நேரத்தில் நான் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்வதோடு, அவருடைய கட்சியினருக்கும், அவருடைய குடும்பத்தினருக்கும் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய அமைச்சர் நாஞ்சில் மனோகரன் அவர்கள் ஒரு நல்ல, சிறந்த அரசியல்வாதி. 1957-லிருந்து அவரை நான் நன்றாக அறிவேன். நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் என்னுடைய கல்லூரிக்கு அவர் பேச்சாளராக வந்திருந்த காலத்திலேயிருந்து நான் அவரை அறிவேன். அவர் எந்த இயக்கத்தில் இருந்தாலும், பழகுவதற்கு அவரைப்போல ஒரு இனிய நண்பர் கிடைக்க மாட்டார். இறுதியாக





அவர் கலந்துகொண்ட நிகழ்ச்சி -- என்னுடைய தொகுதியில் ஒரு தாலுகா அலுவலகம் திறக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டிருந்தேன் - அதற்கும் அவர்கள் தேதி கொடுத்தார்கள். அந்தத் தேதிப்படி அங்கே வந்து அந்த நிகழ்ச்சியில் அவர்கள் கலந்துகொண்டார்கள். அப்போது எனக்கு ஒரு பெரிய பாராட்டு விழாவே வைக்கின்ற அளவிற்கு சிறப்பான முறையிலே பேசினார்கள். நான்கூட அங்கே சில கோரிக்கைகளையெல்லாம் வைத்தேன். அப்போது, சென்னை வந்தவுடன் நானும் நீங்களும் சேர்ந்து முதலமைச்சர் அவர்களைப் பார்த்து இந்தக் கோரிக்கைகளையெல்லாம் எளிதாக நிறைவேற்றிவிடுவோம் என்றுகூட அவர்கள் அந்த மேடையிலே சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு நல்ல அன்புள்ளம் கொண்ட, சிறந்த நாகரிகம் மிக்க அருமையான மனிதர் நம்முடைய நாஞ்சில் மனோகரன் அவர்கள். அவர் இறந்துவிட்டார் என்று நினைக்கின்றபோது அவருடைய கட்சியைவிட, குடும்பத்தைவிட நான் மிகுந்த வேதனை அடைந்தேன். காரணம், அவர் அவ்வளவு அன்புடன் பழகக்கூடியவர். பழகுவதற்கு இனியவர். பண்பு மிக்கவர். அவரை இழந்து வாடுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த அன்பரசன் அவர்கள் குறுகிய காலத்திலே இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினராக இருந்தாலும்கூட, பேசுகின்றபோது பல புத்தகங்களை எடுத்துப் படித்து, தயாரித்துப் பேசுகின்ற ஓர் ஆற்றல் மிக்கவராக விளங்கியவர் நம்முடைய அன்பரசன் அவர்கள். அவரை எங்கே பார்க்கலாம் என்றால் நூலகத்திலேதான் பார்க்கலாம். அவர் இந்தச் சட்டமன்றத்தில் குறுகிய காலமே இருந்தாலும்கூட சிறந்த முறையிலே பணியாற்றியதற்கு அவருடைய கட்சியைச் சார்ந்தவர்களுக்கும், அவருடைய குடும்பத்தினருக்கும் என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-50*

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் வல்லரசு அவர்களைப்பற்றி நம்முடைய பேராசிரியர் அவர்கள் பேசுகின்றபோது, இங்கே நம்முடைய பேராசிரியர் அவர்கள் பேசுகின்றபோது, திருமணமே செய்துகொள்ளாமல் தன்னுடைய வாழ்க்கையை முழுமையாக அரசியலுக்கு அர்ப்பணித்தவர் என்று சொன்னார். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அக்கா பொன்னம்மாள் அவர்கள்

ஒரு செய்தியைச் சொன்னார்கள். அவர் வீட்டிற்குத் துக்கம் விசாரிக்கச் செல்லுகின்ற நேரத்தில், வீடு எங்கே என்று கேட்ட நேரத்தில், வீடுகூட அவருக்குக் கிடையாது. அவர் ஒரு ஹோட்டலில் ஒரு அறையிலேதான் தங்கிக்கொண்டிருந்தார் என்று சொன்னதாக என்னிடம் சொன்னார்கள். அப்படி வீடு இல்லாமல், குடும்பம் இல்லாமல், இந்த நாட்டிற்காக தெய்வத் திருமகன் தேவருடைய வழியில் ஒரு சிறந்த தேசியவாதியாக, சிறந்த அரசியல்வாதியாக, சட்டமன்ற உறுப்பினராகத் திகழ்ந்த திரு. வல்லரசு அவர்களுக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.**

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த முன்னாள் அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் ஓர் அரசியல் பாரம்பரியமிக்க குடும்பத்தின் வாரிசாக, இந்திய அரசினுடைய அமைச்சரவையிலே இடம்பெற்று, பல்வேறு பணிகளைச் செவ்வனே, சிறந்த முறையிலே செயலாற்றியவர். நம்முடைய அவையினுடைய மாண்புமிகு முன்னவர் அவர்கள் முன்மொழிந்திருப்பதைப் போன்று முற்போக்கான சிந்தனையுள்ள ஒரு குடும்பத்திலே வளர்ந்தவர். அவருடைய மறைவு நம்முடைய தமிழ்நாட்டிற்கும், இந்திய அரசியலுக்கும் ஒரு பேரிழப்பாக அமைந்துள்ளது.

அதுபோன்று, மறைந்த நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் 1957-லே எங்களுடைய நாடாளுமன்றத் தொகுதியிலே போட்டியிட்டு தோல்வியுற்றிருந்தபோதிலும்கூட, அந்தப் பகுதியிலே அவர் தேர்தலில் நின்ற காலத்திலே ஏழை, எளிய மக்களிடத்திலே பெற்றிருக்கின்ற நல்ல அனுபவங்களை எங்களிடத்திலே அடிக்கடி அவர் உரையாற்றுகின்றபோது நினைவுபடுத்திக்கொள்வார். அவர் நல்ல பண்பாளர். நல்ல இலக்கியவாதி. நாடாளுமன்ற உறுப்பினருக்கான சிறந்த பாங்கும் அவரிடத்திலே இருந்ததை நம்மால் காண முடியும். அன்றைக்கிருந்த மத்திய அமைச்சரவையில் அகில இந்தியத் தலைவர்களோடு அவர் கொண்டிருந்த அன்பு, அவருடைய அரசியல் தொடர்புகள் பற்றி பல்வேறு தடவை இதே சட்டமன்றத்திலே அவர் நினைவூட்டுகின்றபோது நமக்கெல்லாம் வியப்பளிக்கக்கூடிய அளவிற்கு இருக்கும். இதே மாமன்றத்திலேகூட மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற பேச்சு, விவாதங்கள், கருத்து மோதல்கள் போன்றவற்றிற்குத் தவறு, சரி என்று ஒரு நொடியிலே மாண்புமிகு சுப்பராயன் அவர்களிடத்திலும், என்னிடத்திலும் குறிப்பிட்டு, இந்த விவாதங்கள் தேவையில்லை, இவை தேவை என்று பளிச்சென்று சொல்லக்கூடிய ஒரு பயிற்சியாளராகக்கூட இருந்தார். அப்படிப்பட்ட, சிறப்புமிக்க நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மறைவு தமிழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஒரு பேரிழப்பாக அமைந்தது.



மாண்புமிகு அன்பரசன் அவர்கள் சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, குறைந்த நாட்கள் மக்களுக்குச் சேவை செய்திருந்தாலும்கூட, இந்த அவையிலே பல தடவை அவர் தொகுதியினுடைய நிகழ்ச்சிகளை நினைவுகூர்ந்து உரையாற்றிய காட்சிகளையெல்லாம் நம்மால் காண முடிந்தது. அவரும் இயற்கை எய்தியதற்கு அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று திரு. பி.என். வல்லரசு அவர்கள், சட்டப் பேரவை உறுப்பினராக 1989-லே தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னால் அவரோடு எனக்கு நல்ல தொடர்பு ஏற்பட்டிருந்தது. தொடர்ந்து அவர் பேசுகின்றபோது பிற்படுத்தப்பட்ட மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் முன்னேறுவதற்காக அழுத்தந்திருத்தமாக, ஆணித்தரமாக பேசுகின்ற நிலையை நாம் பார்த்தோம். அவர் அடிக்கடி உணர்ச்சிவசப்பட்டு பேசுகின்ற நிலையை நாம் பார்த்தோம். அவருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்தும்கூட, அவர், அவருடைய பணியைச் செவ்வனே செய்ய வேண்டும் என்பதற்காக அவர் பணியாற்றிக்கொண்டிருக்கின்றபோது, அவர் உடல்நிலையைப் பற்றிக்கூட மறந்திருக்கிறார். இவர்களுடைய மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகவும், என் சார்பாகவும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு, இதற்கு முன்னால் தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு, தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்காக இதே மாமன்றத்தில் பல தடவை தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினராக இருந்த 9 முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்களின் மறைவுக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.ஆர். சுந்தரம்.**

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் மத்திய மின் துறை அமைச்சர் திரு. ரங்கராஜன்

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2000 நவம்பர் 6

குமாரமங்கலம் அவர்கள், காங்கிரஸ் பேரியக்கத்தில் மிக்க ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்கள். அவர்கள் ராஜீவ் காந்தி காலத்தில் மிகவும் புகழ்பெற்று விளங்கினார்கள். இளம் தலைமுறையைச் சேர்ந்த அவரை, ராஜீவ் காந்தி அவர்கள் அரசியலில் மிகவும் ஊக்கப்படுத்தினார்கள். அரசியலிலே வளர்ந்து வந்துகொண்டிருந்த சமயத்திலே, மருத்துவத் துறையினுடைய அலட்சியத்தால் அவரை நாம் இழந்துவிட்டோம். அவரை இழந்ததற்காக அவருடைய குடும்பத்தாருக்கு எங்கள் கட்சியின் சார்பாகவும், எனது சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 9-55*

அடுத்தபடியாக, முன்னாள் வருவாய்த் துறை அமைச்சர் நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அன்பைப் பெற்றவ்ர்கள். சிறந்த நாடாளுமன்றவாதி. கட்சி வேறுபாடின்றி அனைவருடனும் பழகக்கூடியவர்கள். அவருடைய மறைவிற்கும் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, திரு. அன்பரசன் அவர்கள், அறந்தாங்கி இடைத்தேர்தலிலே வெற்றி பெற்றவர்கள். ஆரம்ப காலத்திலே எங்களுடைய கட்சியில் இருந்தவர்கள். குறுகிய காலம் சட்டமன்றத்திலே இடம்பெற்று, திடீரென மாரடைப்பால் மறைந்த அவருடைய குடும்பத்திற்கும் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, உசிலம்பட்டியினுடைய சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர் வல்லரசு அவர்கள். ஆளும் கட்சியை ஆதரித்துப் பேசினாலும் தன்னுடைய தொகுதிப் பிரச்சினை என்று வரும்போது அழுத்தந் திருத்தமாக வாதாடிப் பேசக்கூடியவர். பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக அதிகமாக வாதாடியிருக்கிறார்கள். தேவர் பெருமான்மீது மிகுந்த பற்றுதல் கொண்டவர். அவரை இழந்து வாடும் அவருடைய குடும்பத்திற்கும் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.



2000 நவம்பர் 6]

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானத்தில் பேசுவதற்கு நான் மிகவும் வேதனையடைகிறேன். ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் எங்களுடைய ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்திலே வளர்ந்தவர். அவருடைய வரலாறு மிக்க குடும்பத்தோடு எங்களுடைய மாவட்டம் இணைந்திருந்தபோது, நாங்களும் இணைந்திருந்தோம் என்ற பெருமிதத்தோடு, அந்த வரலாற்றுப் புருஷனின் ஆன்மா சாந்தியடைய எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக எங்கள் இரங்கலைத் தெரிவிப்பதோடு, என்னையும் என்னுடைய அன்புச் சகோதரர் திரு. ஜி.கே. மணி அவர்களையும் சந்திக்கும்போதெல்லாம் 'ஒகேனக்கல் நீர் மின் திட்டத்தை நிச்சயமாக நம்முடைய முதல்வரிடத்திலே சொல்லி கண்டிப்பாக நிறைவேற்றத் துடிக்கிறேன்' என்று பலமுறை எங்களிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். அப்பேர்பட்ட ஒரு நல்லவர் நம்மைவிட்டுப் பிரிந்ததால் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த நானும், அன்பு நண்பர் மணி அவர்களும், எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்களும் வருத்தப்படுகிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

நாஞ்சில் மனோகரன் அவர்கள், சென்ற கூட்டத் தொடரிலே, என்னுடைய எதிரிலேயே அமர்ந்திருந்த அந்த சிங்காரப் புருஷன் அவர்கள், நம்மைவிட்டு மறைந்துவிட்டார்கள். அவர் அண்ணா அவர்கள், காலத்தினுடைய வரலாறு ஆகவும், கலைஞர் காலத்தினுடைய கவிதையாகவும் திகழ்ந்தவர். சிறந்த பேச்சாளி. நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கும்போது அவரோடு நெருங்கிப் பழகியிருக்கிறேன். பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இந்த அவையிலே இருக்கும்போதும் அவரிடத்திலே நெருங்கிப் பழகியிருக்கிறேன். இந்தக் குளிர்காலக் கூட்டத்தில் என் நெஞ்சம் மட்டுமல்ல, இந்த அவையிலே இருக்கக்கூடிய நெஞ்சங்களெல்லாம் சுடும் அளவிற்கு நாஞ்சிலாருடைய மறைவு இருக்கிறது. நம் தமிழகத்தில் இருக்கக்கூடிய ஆறரை கோடி தமிழ் மக்களுடைய இரங்கலையும் இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, அன்பரசன் அவர்கள் எவ்வளவு இனிய பண்பாளர் என்பதை இந்த அவையிலே அவை முன்னவர் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள். இரண்டு

[திரு. ஐ. கணேசன்] [2000 நவம்பர் 6

கூட்டத் தொடரிலே மட்டும் கலந்துகொண்டாலும் நம்முடைய உள்ளங்களில் எல்லாம் நிறைந்த அந்த அன்பரசன் அவர்கள் இன்று நம்மிடையே இல்லை.

பி.என். வல்லரசு அவர்கள் மிகச் சிறப்பு வாய்ந்த ஒரு நல்ல தொண்டர். தன்னுடைய உள்ளத்திலே உள்ளதை எந்தக் காரணத்தை முன்னிட்டும் சிறிதும் அதிலிருந்து கீழே இறங்காமல் எவ்வளவு பெரிய பிரச்சினையாக இருந்தாலும் ஆதரிப்பவரை ஆதரித்துக் கொண்டிருப்பேன் என்று உறுதியோடு ஆதரித்தவர். எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்க பல நல்ல செயல்பாடுகளைச் செய்தவர். திருமணம் செய்து கொள்ளாமல் மக்களுக்காகத் தொண்டாற்றியவர் என்று இந்த அவையிலே பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். அதேபோல நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும்போது ஒரு நிகழ்ச்சியையும் சொன்னார்கள். சொந்த வீடு கூட இல்லாமல் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்து மக்களுக்காகப் பணியாற்றிய ஒரு நல்லவர் என்று. அவருடைய ஆத்மா சாந்தியடைய எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக என் இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்திப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு பெருமக்களுடைய செம்மையான சேவைகளைத் திடீரென்று தமிழகம் இழந்திருக்கிறது. அதற்காக தமிழகத்தின் சார்பாக அதனுடைய உணர்வைப் பிரதிபலிக்கும் வகையில் இந்த அவை மறைந்த தலைவர்களுடைய இழப்பிற்குத் துயரையும் அவர்களுடைய குடும்பங்களுக்கு இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதற்காக மாண்புமிகு அவை முன்னவர் பேராசிரியர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நான்கு தீர்மானங்களை நானும் ஆதரித்து அவர்களுடைய கருத்துக்களோடு என்னுடைய கருத்துக்களையும் இணைத்துக் கொள்கிறேன்.

பேராசிரியர் அவர்கள், ஒரு பெரிய பாரம்பரியத்தைச் சார்ந்த, நீண்ட பாரம்பரியத்தைச் சார்ந்த ஒரு பெருமகனாக, இளைஞராக இருந்தாலும் தன்னை இனம் காட்டிக் கொண்டவர் ரங்கராஜன் குமாரமங்கலம் என்று குறிப்பிட்டார்கள். இந்த அவையினுடைய பழைய



2000 நவம்பர் 6] [திரு. ம. அப்துல் லத்திப்]

காலத்து நடவடிக்கைகளை அவைக் குறிப்புகளிலிருந்து நாம் படித்தால், டாக்டர் சுப்பராயன் அவர்கள் இந்த அவையில் ஆங்கிலத்தில் அதிகமாக உரையாற்றி இருக்கிறார்கள். எவ்வளவுதூரம் ஆழமாகவும், அழுத்தமாகவும் அவர்கள் கொள்கை பிடிப்பு உள்ளவர்களாகவும், அதேநேரத்தில் எவ்வளவு சீர்திருத்த கருத்துகளையும் இந்த தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பேசியிருக்கிறார்கள், தொடர்ந்து சேவை செய்திருக்கிறார்கள் என்பது தெரியும். அவருடைய மகனான நம்முடைய மோகன் குமாரமங்கலம் அவர்கள் சிறந்த வழக்கறிஞர். மோகன் குமாரமங்கலம் அவர்கள் பல துறைகளில், குறிப்பாக சட்டத் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த அவர்கள் பொதுவுடைமைத் தத்துவங்களையும் ஏற்றுக்கொண்டு, பொதுவுடைமை உணர்வுகளோடும் மக்கள் செயல்பட வேண்டும் என்று பாடுபட்டவர்கள். அன்னை இந்திரா காந்தி அவர்களோடு இணைந்து, அவர்களுடைய கருத்துகளையும் ஏற்றுக்கொண்டு பிற்காலத்தில் அவருடைய அமைச்சரவையிலேயே அவர் இருந்து நாட்டுக்கும், தமிழ்நாட்டிற்கும் சேவை செய்து, அவர்களும் திடீரென்று, எதிர் பார்க்காத ஒரு நேரத்திலே மறைந்தார்கள். அவருடைய மறைவு எப்படி ஏற்பட்டது என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதனைத் தொடர்ந்து ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் சிறுவயதிலேயே டெல்லி செல்லும்போதெல்லாம் தமிழகத்தை ஞாபகப்படுத்தும் அளவிற்கு வடநாட்டில், டெல்லியில் இருந்துகொண்டு எந்த அளவுக்கு தமிழ்நாட்டிற்குச் சேவை செய்ய முடியும் என்பதை நினைவுகூரத்தக்க அளவுக்கு எப்போதும் செயல்பட்டு வந்திருக்கிறார்கள். அவருடைய மறைவு குறித்து பல சர்ச்சைகள் இப்போது இருந்து கொண்டிருக்கின்றன. 48 வயதிலேயே மறைந்துவிட்ட அந்த நல்ல இளைஞர் காப்பாற்றப்பட்டிருக்கக்கூடாதா என்ற சர்ச்சை நாட்டிலே இப்போது இருந்தாலும், பெரும் தலைவர்கள் நோய் வாய்பட்டிருக்கும்போது அந்த நோய்களைத் தீர்ப்பதில் நாம் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும் என்ற ஒரு சிந்தனையைக்கூட அவர்களுடைய மறைவு நமக்குத் தூண்டியிருக்கிறது. இருந்தாலும் ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் ஆங்கிலத்திலே, தமிழிலே, சில நேரங்களிலே வடநாட்டு மொழியிலேயும் பேசி நமக்காக வாதிட்டவர்கள். அவர்களுடைய மறைவு மிகத் துயரப்படக்கூடிய ஒன்று. அவருடைய துணைவியாருக்கு, பிள்ளைகளுக்கு நான் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

நாஞ்சிலார் அவர்கள் குறித்து பேராசிரியர் அவர்கள் மிக உருக்கமாகச் சொன்னார்கள். நாஞ்சிலார் அவர்களை நாங்கள் மாணவப் பருவத்திலேயிருந்தே அறிந்தவர்கள். அவருடைய பேச்சு, அண்ணாவினுடைய பேச்சு, நாவலருடைய பேச்சு, கலைஞருடைய பேச்சு, பேராசிரியருடைய பேச்சு இவை எல்லாம் ஒவ்வொரு வகையிலே அமைந்த பேச்சுக்கள், தமிழ்நாட்டிலே அங்கீகரிக்கப்பட்ட பேச்சுக்கள், மக்கள் விரும்பிக் கேட்பதற்குச் செல்லக்கூடிய பேச்சுகள். அதிலே நாஞ்சிலார் அவர்களுக்குத் தனியொரு பாணி இருந்தது. அன்றைக்கு மாணவர்களாக இருந்த நாங்கள் அவருடைய பேச்சைக் கேட்பதற்கு கூட்டத்திற்குச் சென்று, திரும்பி வருவதற்கு பேருந்து இல்லாவிட்டாலும் நடந்தே போவோம், நடந்தே வருவோம். அது ஒரு தனி ரகம். விஷயத்தை உள்ளத்திலே இருத்தும் அளவுக்கு, சொல்லக்கூடிய விஷயத்தை அவர்கள் நேரடியாகச் சொல்லாவிட்டாலும், அவருக்கே உரிய பாஷையில் சொல்லி ஜனங்களை, மக்களை ஈர்ப்பது அவருடைய பழக்கம். எனக்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அவர் பச்சையப்பன் கல்லூரியிலே படித்தவர். எனக்கு சீனியர். ஆனால், அவர் கல்லூரியை விட்டுச் சென்ற பிறகுகூட நாஞ்சிலாருடைய பாரம்பரியம் அந்த பச்சையப்பன் கல்லூரியிலே இருந்தது. என்னோடு படித்தவர்களுக்கெல்லாம்கூட தெரியும். எனவே, நாஞ்சிலாரை நான் படிக்கும்போதே மிகவும் அதிகமாக நேசித்தேன். அவருடைய பேச்சைக் கேட்போம். இப்போது அவர் இல்லையென்றால் என்னால் நம்ப முடியாது. அவர் சிறப்புக்குரிய பேச்சாளர். கடைசி நேரத்திலே அவர் உடல்நிலை மிகவும் மோசமாகிவிட்டது, இந்தப் பக்கம் வரும்போதே இந்த மைக்கைப் பிடித்துக்கொண்டு வருவார், கையெல்லாம் நடுங்கும், எங்களுக்குக்கூட பார்ப்பதற்கு வேதனையாக இருக்கும். ஆனால், சென்றுவிட்டார்.

நாஞ்சிலாருடைய மறைவு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டுமல்ல, தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு அவர் ஒரு கவிஞர், ஒரு வித்தாரமான பேச்சாளர். வார்த்தைகளை வைத்து விளையாடுவதில் வல்லவர். தமிழை உணர்ந்து பேசக்கூடிய ஒரு தமிழறிஞர். அப்பேர்ப்பட்டவர் நிர்வாகத்திலேயும் சிறந்து விளங்கினார். எல்லோரிடத்திலும் இன்முகத்தோடு, இன்மொழி கூறி பேசக்கூடியவர். எல்லாவற்றுக்கும் மேலாக யாருடைய மனமும் நோகாமல் பேசி எல்லோரையும் தன்வயப்படுத்துவதில் அவருக்கு இருந்த வல்லமை





எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. நான் எங்கே இருந்தாலும், நாஞ்சிலாருடைய இந்தப் பிரிவு, என்னைப் பொறுத்தவரையிலே, தனிப்பட்ட முறையிலே மிகுந்த வேதனையைத் தருகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டுமல்லாமல், எல்லோருக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பரசன் அவர்கள் சிறிது காலம் இந்தச் சட்டமன்றத்திலே இருந்தவர். இடைக்காலத்திலே அவர் தேர்வு பெற்றார். 1972-லேயே அவர் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தவர்தான். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சென்றுவிட்டார். பிறகு அந்தப் பாரம்பரியத்தையொட்டி நண்பர் திருநாவுக்கரசோடு அவர் சேர்ந்து, அந்தத் தொகுதியிலே, அந்தப் பகுதியிலே மக்களுடைய ஆதரவைப் பெற்றவர் என்ற நிலையில் அழுத்தமாக, நல்ல தமிழிலே உறுதியாகப் பேசக்கூடிய ஒரு நண்பர். அவரை இழந்துவிட்டது நமக்குக்கூட ஒரு இழப்பு. அதற்காக அவருடைய குடும்பத்திற்கும் என்னுடைய அருமைத் தம்பி திருநாவுக்கரசு அவர்களுக்கும், அவருடைய கட்சியினருக்கும் நான் என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வல்லரசு மறைந்ததை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. மேடையிலே மேடைப் பேச்சாளராக இருந்துகொண்டு இறக்க வேண்டுமென்பது அவருடைய விருப்பமோ என்னவோ தெரியவில்லை, எந்தவித நோயும் இல்லாமல், ஏதோ மருத்துவமனைக்குச் சென்றார், படுக்கையில் படுத்திருந்தார் என்ற நிலைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு, நாட்டுக்காகவும் வீட்டுக்காகவும் பேசிக்கொண்டிருந்த அந்த நல்லவர் எங்கே பணி செய்துகொண்டிருந்தாரோ, அங்கே பேசிக்கொண்டே உட்கார்ந்தார். மருத்துவர் வந்து "ஏற்கெனவே சென்றுவிட்டார், இனி திரும்ப மாட்டார்" என்று சொன்ன செய்தி எல்லாம் மிகுந்த வேதனைக்குரியது. என்னோடு நெருங்கியிருந்தவர். நாங்கள் உருகி ஒருவருக்கொருவர் போற்றி மகிழ்ந்திருக்கிறோம். அப்பேர்ப்பட்ட வல்லரசு அவர்கள் இன்றைக்கு இந்த அவையிலே இல்லையென்பது எனக்குப் பெரும் துயரை ஏற்படுத்தியிருக்கிறது. இந்திய தேசிய லீக்கின் சார்பாக மறைந்த இந்த நான்கு பெருமக்களுக்கும் அவர்களுடைய மறைவிற்காக இரங்கலைத் தெரிவித்து, அவர்களுடைய கட்சிகளுக்கு என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்து, அவர்தம் குடும்பத்தினர்களுக்கு என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

[2000 நவம்பர் 6

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மத்திய அமைச்சர் மாண்புமிகு ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் ஓர் அரசியல் நாகரிகம் மிக்க, பண்பாடுமிக்க குடும்பத்திலிருந்து வந்து, மத்திய அமைச்சரவையிலே தமிழகத்தின் சார்பிலே பொறுப்பினை ஏற்று, தமிழக மக்கள் பெருமைப்படுகின்ற அளவிற்கு தன்னுடைய பணியைச் சீரிய முறையிலே ஆற்றிக்கொண்டிருந்த நேரத்தில், மிகக் குறைந்த வயதிலே மரணம் எய்தியது இந்திய மக்களும் தமிழக மக்களும் துயரம் பெறுகின்ற அளவிற்கு ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. அன்னாருடைய மறைவுக்கு, அவருடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும் அவருடைய இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்கும் எங்களது இந்திய பார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பிலே ஆ இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து நமது வருவாய்த் துறை அமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் மறைவு. நான் கல்லூரியில் 1960 ஆம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில் மாணவர் பேரவையின் சார்பிலே நான் பொறுப்பிலேயிருந்து, அவர்களை எங்களது கல்லூரிக்கு அழைத்துச் சென்றபோது அவர்கள் எங்கள் கல்லூரி விழாவிலே கலந்துகொண்டு உரையாற்றிய அந்த உரையினை இன்றைக்கும் என் உள்ளத்திலே எண்ணிப்பார்க்கின்றபோது திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்திற்கு அவர் மாணவர்களுடைய சக்தியை எப்படியெல்லாம் ஈர்த்து இந்த இயக்கத்தை வலுப்படுத்தினார் என்பதையெல்லாம் சிந்திக்கின்ற நேரத்தில் அவரது மறைவு என்பது மிகப் பெரிய இழப்பு. அவர்களை, நான் மாணவனாக, கட்சியினுடைய பேச்சாளராக பார்த்த காலத்திலிருந்து நல்ல பேச்சாளராகப் பார்த்திருக்கின்றேன். நாடாளுமன்ற கட்சி தலைவராகப் பார்த்திருக்கின்றேன். தமிழக அமைச்சராகப் பார்த்திருக்கின்றேன். எந்த நேரத்திலும் ஒரே நிலையிலே இருக்கின்ற மனிதாபிமானம் கொண்ட ஒரு நல்ல அன்புப் பெட்டகமாக விளங்கிய ஒரு மனிதரை, மிகப் பெரிய நல்லவரை இன்றைக்கு தமிழ்நாடு இழந்திருக்கிறது. அன்னாருடைய இழப்பு கட்சி மாறுபாடின்றி எல்லோரையும் பாதிக்கின்ற ஓர் இழப்பாக அமைந்திருக்கிறது. அவருடைய குடும்பத்தாருக்கும் அவர்



2000 நவம்பர் 6] [திரு. லா. சந்தானம்]

சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், தமிழக மக்களுக்கும் என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. அன்பரசன் அவர்கள் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேதான் இங்கே அந்தப் பொறுப்பினை ஏற்று மிகக் குறுகிய காலத்திலே மரணம் அடைந்திருந்தாலும்கூட, அவரோடு தனியாக உரையாற்றுகின்ற நேரத்தில் அவர் அந்தப் பகுதி மக்களிடத்திலே எவ்வளவு பற்றும் பாசமும் கொண்டிருந்தார் என்பதை அறிய முடிந்தது. அந்த கந்தர்வகோட்டை பகுதியைச் சேர்ந்தவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்கின்ற தன்னுடைய நிலையைப் பல்வேறு கட்டத்திலே என்னிடத்திலே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அதுபோல மக்களிடத்திலே தனக்குள்ள பற்றுதலையும் பாசத்தையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்த ஒரு நல்ல சட்டமன்ற உறுப்பினர் அவர். அவர் மறைவு நமக்கெல்லாம் பேரிழப்பாக அமைந்திருக்கிறது. அதற்காக அவர் சார்ந்திருந்த அருமை நண்பர் திருநாவுக்கரசு அவர்களின் இயக்கத்தாருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் வல்லரசு அவர்கள் எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்டு எங்களுடைய இயக்கத்திற்கு பல்வேறு பணிகளை இளமைப் பருவத்திலிருந்து ஆற்றியிருக்கிறார். அவரைப் பொறுத்தளவிலே எந்தக் காரியத்தை எடுத்துக்கொண்டாலும் அதைச் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும் என்கிற நோக்கத்தோடு செயலாற்றுகின்ற ஒரு தொண்டராகவே அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கத்திலே இருந்தார்கள். தற்காலிகமாக இயக்கத்திலே சில கருத்து வேறுபாடுகள் இருந்தாலும்கூட அவர் இந்த இயக்கத்திற்கு ஆற்றிய பணிகள் இன்னும் எங்களுடைய நெஞ்சத்திலே நீங்காத நினைவுகளாக இருந்துகொண்டிருக்கின்றன. எனவே, அவருடைய இழப்பு எங்களுக்கு பேரிழப்பு என்று கூறி, அவரை இழந்திருக்கின்ற அவருடைய குடும்பத்தாருக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் எங்களது தெய்வத் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் ஆசி கூற வேண்டுமென்று சொல்லி, என்னுடைய இரங்கலை எங்களுடைய அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பிலே கூறி அமைகின்றேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய விடுதலைப் போராட்ட காலத்திலிருந்து இந்திய நாட்டினுடைய, தமிழகத்தினுடைய அரசியல் வாழ்வோடு நிறைந்த சம்பந்தம் இருந்த திருச்செங்கோட்டிலே உள்ள ஒரு சிறந்த குடும்பத்திலே பிறந்தவர், வளர்ந்தவர் என்ற முறையில் சிறு வயதிலேயே அரசியலிலே ஈடுபட்டு, நல்ல ஒரு தொழிற்சங்கவாதியாகக் கூடச் செயலாற்றினார் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள். அவர் ஒரு சிறந்த வழக்கறிஞர் என்ற முறையில் கூடச் செயலாற்றினார். அதற்கெல்லாம் மேலாக அவர் அரசியலில் ஈடுபட்டு அதுவும் குறிப்பாக மத்திய மின்சாரத் துறையினுடைய அமைச்சர் என்ற முறையில் தமிழகத்திலும், இந்தியாவிலும், பல அபிவிருத்திகளை ஏற்படுத்துவதற்கு முயற்சித்தவர். சிறு வயதிலேயே அவர் இறந்து விட்டது என்பது நமக்கெல்லாம் ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்துகிறது. அவருடைய இழப்பு இந்த நாட்டிற்கு ஒரு பேரிழப்பு என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் எடுத்துச் சொல்லி, என்னுடைய ஆழ்ந்த இரங்கலை அன்னாரது மறைவால் வாடிக் கொண்டிருக்கும் அவருடைய குடும்பத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நமது வருவாய்த் துறை அமைச்சராக இருந்த உயர்திரு நாஞ்சில் மனோகரன் அவர்கள் எங்களுடைய குமரி மாவட்டத்தில் பிறந்து, அங்கே வளர்ந்து, மாணவனாக அங்கே படித்தவர். அங்கே இன்டர்மீடியட்வரைதான் படிப்பதற்கு வசதி இருந்தது. பி.ஏ. படிப்பதற்கு அங்கே கல்லூரி இல்லை. அந்தக் காலத்தில் அவர் உயர் படிப்பிற்காக சென்னைக்கு வந்து, சென்னையிலே திராவிட இயக்கத்தோடு தன்னை இணைத்துக்கொண்டு, திராவிட இயக்கத்தினுடைய ஒப்பற்ற தலைவர்களில் ஒருவராக சிறந்து விளங்கினார். ஒரு சிறந்த speaker என்ற முறையிலே, இந்த நாடு அவரை நன்கு அறியும். அதற்கும் மேலாக அவர் நாடாளுமன்ற கட்சித் தலைவராக இருந்தார். அவர் ஒரு சிறந்த Parliamentarian என்ற அங்கீகாரத்தைப் பெற்றிருந்த ஒருவர் என்பதை நாம் மறந்து விட முடியாது. அவர் இந்நாட்டிற்காக பல நல்ல contri-bution-களைக் கொடுத்திருக்கிறார். அப்படிப்பட்ட ஒரு தலைவருடைய இழப்பு என்பது தமிழகத்திற்கும் அதேபோன்று இந்திய நாட்டிற்கும் பேரிழப்பு என்று நாங்கள் கருதுகிறோம். அவருடைய மறைவால்



வாடுகின்ற அவருடைய குடும்பத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பிலே இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, திரு. அன்பரசன் அவர்கள் சிறிது காலம்தான் இந்த அவையிலே செயலாற்றி இருந்தாலும் அவர் இந்த அவையிலேயும், அதேபோன்று Public Undertakings Committee-யினுடைய உறுப்பின ராக எங்களோடு இருந்து, அந்தக் குழுவிலே எடுத்து வைத்திருக்கிற வாதங்களை நாம் பார்க்கின்ற நேரத்தில் ஒரு சிறந்த Parliamentarian என்ற முறையிலே விளங்குவதற்கான எல்லாவிதத் தகுதியும் உள்ள ஒருவராக இருந்தார். துரதிருஷ்டவசமாக அவர் சிறிது காலத்திலேயே நம்மைவிட்டு மறைந்து விட்டது என்பது ஆழ்ந்த வேதனையைத் தருகிறது. அவருடைய குடும்பத்திற்கும், அவருடைய கட்சிக்கும் எங்களுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, பார்வர்டு பிளாக் கட்சியினுடைய தலைவராக இருந்த திரு. வல்லரசு அவர்கள் மதுரை மாவட்டத்திலேயும், அதற்கு அருகில் உள்ள பகுதியிலேயும் உள்ள மக்களோடு நிறைந்த தொடர்பு வைத்துக்கொண்டிருந்த தலைவர் என்பது இன்று அந்தப் பகுதியிலே நாம் போய் அவரைப் பற்றி விசாரிக்கின்ற நேரத்தில் மக்கள் சொல்வதிலே இருந்து, அவர்கள் பாராட்டுவதிலே இருந்து நாம் தெரிந்துகொள்ள முடிகிறது என்பது மட்டுமல்ல, அவர் மக்களுடைய, அதுவும் குறிப்பாக அவருடைய தொகுதியின் நலனுக்காகவேண்டி அயராது உழைத்துக் கொண்டிருந்தவர். அப்படிப்பட்ட ஒருவர் இறந்துவிட்டார் என்பது நிச்சயமாக நமக்குப் பேரிழப்பு ஆகும். நான்கூட அவருடைய மறைவுக்கு இரங்கல் தெரிவிப்பதற்காக முயற்சிக்கிற நேரத்திலே அவருக்கு உற்றாரும் உறவினரும் இல்லை என்று சொன்னதால் அவர் தங்கி இருந்த Lodge Manager-ஐப் பார்த்து அவருடைய சொந்தக்காரர்களுக்கு எங்களுடைய இரங்கலைத் தெரிவித்து விடுங்கள் என்று சொல்லிவிட்டு வரவேண்டிய துரதிருஷ்டம்தான் எனக்கு ஏற்பட்டது. ஆகவே அப்படிப்பட்ட அவருடைய மறைவால் வாடுகிற அவருடைய தொகுதியைச் சார்ந்த மக்களுக்கும் அதேபோன்று அவருடைய உற்றாருக்கும் அவருடைய கட்சிக்கும், எங்களுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, இங்கே இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய பேராசிரியர் அவர்களுடைய கருத்துக்களோடு என்னுடைய கருத்துக்களையும் இணைத்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

[2000 நவம்பர் 6

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த இரங்கல் தீர்மானத்தைப் வழிமொழிந்து மத்திய மின் துறை அமைச்சராக இருந்து இறைவனடி சேர்ந்த மாண்புமிகு ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் சேலம் மாவட்டத்திலே, ஒரு நல்ல குடும்பத்திலே, பாரம்பரியம் மிக்க குடும்பத்திலே, மோகன் குமாரமங்கலம் அவர்களின் வாரிசாகப் பிறந்து வளர்ந்து நல்லமுறையில் மத்திய அரசிலே அமைச்சராக இருந்து பொறுப்பாற்றியவர், திடீரென்று இறைவனடி எய்திவிட்டதற்காக அவருடைய குடும்பத்தாருக்கும் அவரது கட்சியைச் சார்ந்தவர்களுக்கும், தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தப் பேரவையிலே வருவாய்த் துறை அமைச்சராக சிறந்த முறையிலே பணியாற்றிய பெருந்தகை, பேரறிஞர் அண்ணாவினுடைய பெட்டகமாகவும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய அன்புத் தம்பியாகவும் இருந்து, கொடுத்திருந்த வருவாய்த் துறை பொறுப்பை சிறந்த முறையிலே நிறைவேற்றி தமிழக மக்களிடத்திலே சமத்துவ, சமுதாய, சகோதரத்துவ அடிப்படையிலேயும், இஸ்லாமிய மக்களிடத்தில் நல்லுணர்வோடும் பழகி நல்ல பெயரைப் பெற்ற மரியாதைக்குரிய வருவாய்த் துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் இறைவனடி எய்தியதற்காகவும் தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பிலே என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டப் பேரவையினுடைய உறுப்பினராக குறைந்த காலம் இந்தப் பேரவையிலே பணியாற்றியிருந்தாலும் நல்ல அன்பையும் நட்பையும் பெற்ற அன்புச் சகோதரர் அன்பரசன் அவர்கள் இறைவனடி எய்தியதற்காக எங்களுடைய தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. பி.என். வல்லரசு அவர்கள் திடீரென



இறைவனடி எய்தியதற்காக எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொண்டு, தமிழகத்தினுடைய சட்டப் பேரவை உறுப்பினர்களாகப் பணியாற்றிய முன்னாள் உறுப்பினர்கள் 9 பேர் இறைவனடி எய்தியதற்காகவும் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்து, தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பிலே அவர்களுடைய ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் 'குலவித்தை கல்லாமல் பாகம்படும்' என்பதுபோன்று ஒரு சிறந்த பாரம்பரியம் மிக்க அரசியல் வழிகாட்டியாக இருந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய இழப்பு உண்மையிலேயே பாரதிய ஜனதா கட்சிக்கும், அதிலும் குறிப்பாக தமிழக பாரதிய ஜனதா கட்சிக்கும், அதிலும் குறிப்பாக என்னைப் பொறுத்தமட்டிலும் மிகப் பெரிய இழப்பு. அவர் பாரதிய ஜனதா கட்சிக்கு வந்த நாளிலிருந்து தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்களோடு தன்னை இணைத்துக்கொண்டு, மிகச் சிறப்பாக, நல்ல முறையிலே கட்சியினுடைய வளர்ச்சிக்கு அரும்பெரும் பங்காற்றியவர். கடந்த பாராளுமன்றத் தேர்தலில்கூட அவருடைய உழைப்பு, அவருடைய பலவகைப்பட்ட உதவி பாரதிய ஜனதா கட்சிக்கு மிகச் சிறந்த ஓர் ஊன்றுகோலாக இருந்தது. வரக்கூடிய காலகட்டத்தில், என்னைப் பொறுத்தவரையிலும் சட்டமன்றத் தேர்தலில் எனக்கு அவர் மிகச் சிறந்த, அனைத்துத் துறைகளிலும் உதவக்கூடிய ஒருவராக இருந்திருக்க முடியும். அப்படிப்பட்ட அவருடைய இழப்பு பாரதிய ஜனதா கட்சிக்கு மட்டுமல்ல, பாரத நாட்டிற்கு, அதுவும் தமிழகத்திற்குப் பேரிழப்பாகும். அவர் பிறந்த ஊராகிய சேலத்திலும் அவருடைய பாராளுமன்றத் தொகுதியான திருச்சியிலும் உள்ள மக்கள் அவருடைய இறப்பை நினைத்து மிகவும் வேதனைப்படுகிறார்கள். அவருடைய ஆன்மா அழியாது என்றாலும்கூட அவரைப் பிரிந்து வாழக்கூடிய அவருடைய குடும்பத்தாருக்கும், தமிழக மக்களுக்கும் பாரதிய ஜனதா கட்சி சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் சட்டமன்றத்திற்குள் இந்த வழியாக வரும்போதுகூட நான் அவருக்கு

முன்னால் இருக்கும்போது அங்கு வந்து சிறிதுநேரம் நிற்பார். நான்கூட எழுந்து நிற்பேன். என்னவென்று பக்கத்திலே உள்ள அமைச்சரைக் கேட்டால்கூட, என்னுடைய ஊரைச் சார்ந்தவர் என்று வேடிக்கையாகச் சொல்வார்கள். இப்படிப் பல தடவை இதுபோன்ற சம்பவங்கள் நடந்ததுண்டு. அப்படி கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களிடமும் அன்போடு அருமையாகப் பழகக்கூடியவர். அவருடைய இழப்பு, ஒரு சிறந்த அரசியல்வாதியை இழந்த திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எவ்வளவு பெரிய நட்டம் இருக்குமோ, அதைவிடப் பெரிய நட்டம் எங்களுடைய மாவட்டத்திற்கு. ஒரு சிறந்த அரசியல் ஞானியை, ஒரு சிறந்த அரசியல் பெரியவரை, கன்னியாகுமரி மாவட்டம் இழந்துவிட்டதே என்று கன்னியாகுமரி மாவட்ட மக்கள் அனைவரும் வேதனைப்படக்கூடிய நிலை உள்ளது. அவருடைய ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

*முற்பகல் 10-25*

நம்முடைய அன்பரசன் அவர்கள் குறுகிய காலமே இருந்தாலும்கூட, நல்ல தமிழில், நல்ல வார்த்தைகளை சுருக்கமாக, தெளிவாக சிறந்த முறையில் பேசக்கூடியவர்கள். அனைவரிடத்திலும் அன்பாகப் பழகக்கூடியவர். அவருடைய இழப்பு அவருடைய குடும்பத்தாருக்கும், அவரைச் சார்ந்த அரசியல் கட்சிக்கும் மிகப் பெரிய இழப்பாகும். அவர் மறைவு குறித்து இங்கே இரங்கல் தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வோடு என்னுடைய உணர்வையும் பகிர்ந்துகொள்கிறேன்.

வல்லரசு அவர்கள் இறப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னால் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாக கன்னியாகுமரியில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களுடைய வெண்கலச் சிலையையும், முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய சிலையையும் அமைக்க வேண்டுமென்றும், அதற்குண்டான குழு ஏற்பாடு செய்திருக்கிறோம், அதில் நீங்களும் கலந்துகொள்ள வேண்டுமென்றும் எனக்குக்கூட கடிதம் எழுதியிருந்தார். முத்துராமலிங்கத் தேவரைப் போன்று தேசமும், தென்னிந்தியாவும் என்னுடைய இரு கண்கள் என்று பேசக்கூடிய அளவுக்கு உண்மையான தேச பக்தியும், தெய்வ பக்தியும் கொண்டவர். அவருடைய இழப்பு உண்மையான தேசியவாதிகளுக்கு ஒரு மிகப் பெரிய இழப்பாகும்.



அவர் பொது வாழ்வில் தன்னை அதிகமாக ஈடுபடுத்திய காரணத்தால் குடும்ப வாழ்க்கையைக்கூட மறந்து வாழ்ந்தவர். அவருடைய இழப்பும் தமிழகத்திற்கு மிகப்பெரும் இழப்பாகும்.

அதுபோன்று முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் 9 பேர் காலமாகியிருக்கிறார்கள். அவர்கள்கூட தமிழ்நாட்டுக்கு, நம்முடைய முன்னேற்றத்திற்கு அரும்பணியாற்றி உழைத்தவர்கள். இந்த அனைவருடைய ஆன்மா அழியாமல் இருந்தாலும்கூட நம்மைவிட்டுப் பிரிந்து, நம்மை வேதனைப்படுத்திய அவர்களுடைய ஆன்மா சாந்தியடைய வேண்டும். அவர்களுடைய குடும்பத்தாருக்கும், இந்த துக்ககரமான உணர்வைப் பகிர்ந்துகொண்டு, பி.ஜே.பி. கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மத்திய மின் துறை அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களோடு பேசிப் பழகக்கூடிய வாய்ப்புக்கள் மிகக் குறைவாக இருந்தாலும்கூட அந்த சில சந்தர்ப்பங்களிலேயே தலைசிறந்த பண்பாளர் என்ற வகையிலே அவருடைய பழக்க வழக்கங்கள் இருந்தன என்பதை என்னால் கண்டுகொள்ள முடிந்தது. அதன் காரணமாகத்தான் அவர் இன்று பலராலும் பாராட்டப்படக்கூடியவராக இருக்கிறார். அவரை இழந்து வாடும் அவருடைய குடும்பத்தாருக்கும், இயக்கத்திற்கும், நாட்டு மக்களுக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தலைசிறந்த நாடாளுமன்றவாதி என்று பெயர் பெற்று, பேச்சாற்றலையும், எழுத்தாற்றலையும் கொண்டிருந்த, இந்த அவையிலே அமைச்சராக பணியாற்றிய, மாண்புமிகு நாஞ்சிலார் அவர்களுடைய மறைவுக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர் எல்லோராலும் பாராட்டப்படக்கூடியவர். அமைச்சர்களிலே அதிகமாக, மிகவும் எளிதாகப் பழகக்கூடியவராக இன்முகத்தோடு பேசக்கூடியவராக அவர் வாழ்ந்திருக்கிறார். அவருடைய வாழ்வு மற்றவர்களுக்கெல்லாம் ஒரு முன்னோடி. அந்த இனிய பண்பாளரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், இயக்கத்திற்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2000 நவம்பர் 6

அடுத்து, குறுகிய காலமே சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும்கூட தன்னுடைய பேச்சாற்றலால் அனைவரையும் கவர்ந்தவர் திரு. அன்பரசன் அவர்கள். அவருடைய மறைவுக்கும் என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கொண்ட கொள்கையிலே திருமணம்கூட செய்துகொள்ளாமல் தன்னுடைய வாழ்நாளை அர்ப்பணித்தவர் திரு. வல்லரசு அவர்கள். அவரது மறைவுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மத்திய மின் துறை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் மறைவுற்றதற்கு எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறோம். 1996 ஆம் ஆண்டிலிருந்து அவரோடு நெருங்கிப் பழகுகின்ற ஒரு வாய்ப்பு கிடைத்தது. பழகுகிறவர்களிடமெல்லாம் இனிமையாகப் பழகக்கூடியவர். வயதிலே இளையவராக இருந்தால் மாப்பிள்ளை என்றும், பெரியவர்களாக இருந்தால் மாமா என்றும் அழைத்து, மிக நெருக்கமானவராக தன்னை எல்லோரிடமும் அறிமுகப்படுத்தி பழகுவதிலே என்றைக்கும் இனிமையாகவும், நல்ல நட்புக்கோர் இலக்கணமாகவும் திகழ்ந்தவர். அதுமட்டுமல்லாமல், தேசப் பற்று, சமூக நீதி, சமத்துவம் என்று சொல்லக்கூடிய இந்த மூன்று சிறப்பான இயல்புகளாலேயே அவரும், அவரைச் சார்ந்த குடும்பமும் இந்தத் தமிழகத்திற்கு ஆற்றியிருக்கின்ற தொண்டு மிகச் சிறந்த, அளவிட முடியாத அளவிற்கு உள்ள ஒரு தொண்டு. அவரை இழந்து வாடும் அவருடைய குடும்பத்திற்கும், அந்த இயக்கத்திற்கும் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மறைந்த வருவாய்த் துறை அமைச்சர் அண்ணன் நாஞ்சிலார் அவர்களைப் பொறுத்தவரை, நாங்கள் பச்சையப்பன் கல்லூரியிலே படிக்கின்ற காலத்திலேயிருந்து, அவர் அமைச்சராக இருந்து மறைந்த காலம் வரையிலே அவரோடு நெருங்கிப் பழகுகின்ற ஒரு வாய்ப்பு பெற்றிருந்தோம். நாஞ்சில் நாடு கண்டெடுத்த நன்முத்து, திராவிட



2000 நவம்பர் 6] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

இயக்கத்தின் தனிப் பெரும் சொத்து, பண்பிலும் பகுத்தறிவிலும் என்றைக்குமே நிகரில்லாத ஒரு வித்தாகத் திகழ்ந்தவர் நாஞ்சிலார் அவர்கள். அவருடைய மறைவு தனிப்பட்ட முறையிலே திராவிட இயக்கத்திற்கு மட்டுமல்லாமல் தமிழகத்திற்கும் ஈடு செய்ய முடியாத ஒரு இழப்பாகும். வள்ளுவர் பெருந்தகை அவர்கள்,

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்."

என்பார். சிலரிடம் அறிவாற்றல் இருக்கும், ஆனால், மக்கள் பண்பு இருக்காது. ஆனால், நாஞ்சிலார் அவர்கள் இரண்டும் ஒருசேர மிகையாக சிறந்து விளங்கிய பண்பாளர். அப்படிப்பட்ட ஒருவரை, அவர் செய்கின்ற தொண்டால், அவருடைய திறமையால் 'தமிழக மக்களுடைய நெஞ்சங்களில் எல்லாம் நீ என்றைக்கும் வருவாய்' என்ற நல்ல எண்ணத்தோடு தமிழக முதல்வர் அவர்கள், அவரை தமிழக வருவாய்த் துறை அமைச்சராக நியமனம் செய்தார்கள். அவர் இருக்கின்ற வரையிலே கட்சிப் பாகுபாடு இல்லாமல் யார்மாட்டும் மிகுந்த அன்போடு பழகக்கூடிய ஒரு நல்ல பண்பாளராகத் திகழ்ந்தவர். எனவே, அவருடைய மறைவிற்கும், தனிப்பட்ட முறையிலே அவரை இழந்து வாடும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அருமை நண்பர் அன்பரசன் அவர்கள் மிகக் குறுகிய காலம் இந்த அவையிலே இருந்தாலும்கூட எல்லோரிடமும் நல்ல முறையில் பழகி, மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, எல்லோருடைய நெஞ்சங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள். தன்னுடைய ஆற்றலைத் தொகுதி மக்களுக்காக இந்தக் குறைந்த காலகட்டத்திலேகூட செலவிட்டவர்கள். அவருடைய குடும்பத்தாருக்கும் எங்களுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திரு. வல்லரசு அவர்கள் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நல்வாழ்விற்காக ஒரு மிகச் சிறந்த போராளியாகத் திகழ்ந்தவர். அவரை மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்களுடைய அறையிலேதான் கடைசியாக சந்திக்கின்ற வாய்ப்பு கிடைத்தது. அதற்குப் பின்னாலே அவரைப் பார்க்கவில்லை. அப்போதுகூட, அவர் இயக்கத்தைப் பற்றியும் குடும்பத்தைப் பற்றியும் எல்லாவற்றையும் அருமையாக விசாரித்து, இப்படியெல்லாம் நீங்கள் இருங்கள் என்றெல்லாம் சொல்லக்கூடிய ஒரு நல்ல ஆலோசகராகவும் திகழ்ந்தவர்கள். மறைந்த பி.என். வல்லரசு அவர்களுடைய

குடும்பத்தாருக்கும், அவரை இழந்து வாடும் அந்த இயக்கத்தாருக்கும் எங்களுடைய ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் பேராசிரியர் அவர்களால் முன்மொழியப்பெற்று, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் வழிமொழியப்பெற்று, எல்லாக் கட்சிகளின் தலைவர்களாலும் ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கப்பெற்றுள்ள இந்தத் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களையும் இணைத்து, இந்த அவையினுடைய உணர்வுகளை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க உங்களோடு இணைந்து நானும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மறைந்த ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் 50 வயதுகூட நிறையப்பெறாத வயதில், 48 வயதில், இளம்பிராயத்தில் நம்மை விட்டுப் பிரிந்திருக்கின்றார். அரசியலிலே புகழ் வாய்ந்த ஒரு பெரும் குடும்பத்துச் செல்வர் அவர். அவருடைய தந்தை மோகன் குமாரமங்கலத்தை நான் நன்றாக அறிவேன். அவரோடு நன்கு பழகி இருக்கின்றேன். குறைந்த காலமேயானாலும்கூட ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களிடம் நிரம்பப் பழகுகின்ற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அவர் வெற்றிபெற்ற திருச்சி நாடாளுமன்றத் தொகுதி பற்றி எந்நேரமும் கவலைப்படுவதையும் அந்தத் தொகுதிக்கு தொடர்ந்து நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று அக்கறை காட்டுவதிலேயும் எப்படிச் சிறந்து விளங்கினார் என்பதை நான் மிக நன்றாக அறிவேன். தமிழகத்திற்கு நிரம்பச் செய்ய வேண்டும், வளம் சேர்க்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக்கொண்டு பணியாற்றியவருடைய தொண்டு தொடர்ந்து நமக்குக் கிடைக்க முடியாமல் மறைந்துவிட்டார். அவரை இழந்து தவிக்கின்ற அவருடைய குடும்பத்தாருக்கு, நண்பர்களுக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என்னுடைய ஆருயிர் இளவல் நாஞ்சிலார், தமிழக அரசினுடைய வருவாய்த் துறை அமைச்சர் மாத்திரமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தின், பொதுவாக திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர்களிலே



ஒருவராக விளங்கியவர். அவர், நாடாளுமன்றத்திலே தனிக் கொடி நாட்டியவர் என்ற அளவிற்குப் புகழ் பெற்றவர். அன்னை இந்திரா காந்தி அவர்களிடத்திலும் மற்றும் உள்ள தலைவர்களிடத்திலும் அவர் எந்த அளவிற்குப் பழகினார் என்பதும், எவ்வளவு நற்பெயரை அவர்களிடத்திலே எடுத்தார் என்பதும், நாஞ்சில் மனோகரன் என்றால் ஒரு தனி கவனத்தோடு, தனி ஆர்வத்தோடு அவரை டில்லி வட்டாரம் கவனித்தது என்பதையும் நான் மிக நன்றாக அறிவேன்.

அமைச்சராக இப்போது மாத்திரமல்ல -- நிதி அமைச்சராக அருமை நண்பர் எம்.ஜி.ஆருடைய அமைச்சரவையிலே இடம் பெற்றிருந்தபோதும், இப்போது இந்த அமைச்சரவையிலே அவர் இடம் பெற்றிருந்தபோதும், நிர்வாகப் பொறுப்புகளை எவ்வளவு நேர்மையோடு கவனித்தார், எந்த அளவிற்கு தயவுதாட்சணியம் இல்லாமல் நடந்துகொண்டார், எவ்வளவு பொறுப்புணர்வோடு நடந்துகொண்டார் என்பதையெல்லாம் நான் மிக நன்றாக அறிவேன். நான் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமேயானால், அமைச்சர்களிலேயே அவர் ஒருவர்தான், தான் ஆற்றுகின்ற பணிகளை ஒவ்வொரு மாதமும் குறிப்பு எடுத்து, புள்ளிவிவரத்தோடு எனக்குத் தகவலாகத் தரக்கூடியவர். அவர் வெளியூர் செல்வதாக இருந்தாலும்கூட எந்த ஊருக்குச் செல்கிறேன், எப்போது புறப்படுகிறேன் என்பதிலேயிருந்து, வந்து சேர்ந்துவிட்டால்கூட சென்னைக்கு வந்து சேர்ந்துவிட்டேன் என்ற குறிப்பு வரையிலே எனக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கக்கூடியவர். அப்படி தன்னுடைய பணியை மிகக் கண்டிப்பாக கடமை உணர்வோடு ஆற்றிய என்னுடைய அருமை இளவலாக, அருமைத் தம்பியாக இருந்தவரை இழந்து, நீங்கள் எல்லாம் தெரிவிக்கின்ற அனுதாபம், ஆறுதல் இவற்றால் மாத்திரமே நானும் ஆறுதல் பெறுகிறேன் என்பதை இங்கே தெரிவித்துக்கொண்டு, அவருடைய குடும்பத்தாருக்கு இந்த அவையின் மூலமாக இரங்கலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அன்பரசு, திராவிட இயக்கத்திலே ஒரு பகுத்தறிவாளராக தன்னைப் பதிவு செய்து கொண்டவர். திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தவர். எம்.ஜி.ஆருடைய தலைமையிலே பணியாற்றியவர். தம்பி திருநாவுக்கரசு தலைமையிலே இறுதிக் காலத்திலே பணியாற்றியவர். அவர் குறைந்த காலமே இந்தச் சட்டமன்றத்திலே கடமையைச் செய்தார் என்றாலும்கூட அதுவே அவருடைய திறமைக்கு எடுத்துக்காட்டாக, ஆற்றலுக்கு உதாரணமாகத்

[கலைஞர் மு. கருணாநிதி]   [2000 நவம்பர் 6

திகழ்வதை இந்த அவையிலே உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் அறிவீர்கள். அந்த அளவிற்கு அழுத்தந்திருத்தமாக, உறுதியோடு, கொள்கை உணர்வோடு கருத்துக்களை எடுத்து வைத்த பெருமை மறைந்த அன்பரசு அவர்களுக்கு உண்டு. அவருடைய மறைவிற்காக, அவருடைய குடும்பத்தாருக்கு, உற்றார் உறவினருக்கு, நண்பர்களுக்கு, குறிப்பாக அவருடைய கட்சியின் தலைவர் தம்பி திருநாவுக்கரசுவுக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-40*

வல்லரசு, பார்வர்டு பிளாக் கட்சியினுடைய பொதுச் செயலாளர். தொடக்கக் காலத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தோடு எந்தச் சூழ்நிலையிலும் உறவு மாறாமல் இருந்தவர். என்னிடத்திலே பேரன்பு செலுத்தியவர். எந்த நேரத்திலும் தொகுதிக்காகக் குரல் கொடுக்கக்கூடியவர். இந்த மன்றத்திலே குரல் கொடுத்தது மாத்திரமல்ல, தனியாக என்னைச் சந்தித்தாலும், மற்ற அமைச்சர்களைச் சந்தித்தாலும் தொகுதி, தொகுதி என்றே எப்பொழுதும் தொகுதிக்காகவே பணியாற்றிக் கொண்டிருந்தவர். உசிலம்பட்டி தொகுதியில் நீண்ட நெடுங்காலமாகக் கேட்டுக் கேட்டு, வராமல் இருந்த 58 கிராம வாய்க்கால் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதற்காக அரும்பாடுபட்டு, அவரே பொதுப்பணித் துறை அமைச்சர் மூலமாக முயற்சி எடுத்து, அண்மையிலேதான் அந்த முயற்சியிலே வெற்றி பெற்று, அதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்று, பணிகளும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பணி முடிந்து, அதனுடைய தொடக்க விழாவிற்கு அவர் இல்லாமல் மறைந்துவிட்டார் என்பது பெரும் சோகம். வல்லரசு போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு தொகுதிக்கும் வாய்த்தால் எப்படி இருக்கும் என்று எண்ணுகின்ற அளவிற்கு தொகுதிப் பணியை ஆற்றியவர் வல்லரசு அவர்கள். அவருடைய மறைவுக்காகவும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலை, அவருடைய உற்றார் உறவினருக்கு, நண்பர்களுக்கு அவருடைய இயக்கத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்று இந்த நால்வரையன்னியில் மற்றும் கடந்த காலத்திலே இந்த அவையிலே பணியாற்றி மறைந்துவிட்ட பலருக்கும் நாம் இரங்கலைத் தெரிவித்திருக்கிறோம். அந்த இரங்கல் செய்தியோடு என்னுடைய இரங்கலையும் இணைத்து இந்த அளவில் அமர்கின்றேன். வணக்கம்.



2000 நவம்பர் 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அவை முன்னவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உட்பட அனைத்துக் கட்சித் தலைவர்களும் தெரிவித்திருக்கின்ற இரங்கலோடு, என்னுடைய இரங்கலையும் பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து சிறிது நேரம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்ததன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)*

மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப் பெறுகின்றன. பேரவை மீண்டும் நாளை (7-11-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10-44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

--ஏதுமில்லை.--

இந்நாளைய நடவடிக்கைக் குறிப்புகள் சட்டமன்றப் பேரவை நிருபர் பிரிவால் கணினி மூலம் வடிவமைக்கப்பட்டு அரசு மைய அச்சகத்தால் அச்சிடப்பட்டது.

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.